JUDICIAL FORM NO.53

( See Rule 42)
Deposition of Witness
(Chapter XXXIII Code of Criminal Procedure)
IN THE COURT OFJUDICIAL MAGISTRATE, PERUNDURAI

| | | | |
|---|---|---|---|
| Calendar | | C.C.No. | **61/2017** |
| Miscellaneous | | C.M.P.No | |
| Sessions | | S T C No. | |
| Deposition of witness for | **P.W. 7** | Prosecution /Defence / Court | |
| Name | **Arulmurugan** | Caste | |
| Father's Name | **vengatasubramani** | Calling | |
| Village | **Gangapuram** | Religion | |
| Taluk | **Chithode** | Age | |

**Accused No**. 1 & 2 **present**.

Solemnly affirmed in accordance with the provisions of the oaths Act 1969( Central Act 44 of 1969 ) of the day of **Date 08 .05.2025.**

**முதல் விசாரணை**

**1)** நான் மேற்கண்ட முகவரியில் குடியிருந்து கொண்டு விவசாயம் செய்து வருகிறேன். என்னிடம் காட்டப்படும் பார்வை மகஜரில் உள்ள முதலாவது சாட்சி கையொப்பம் என்னுடையதாகும். . 20. 9. 2016 ஆம் தேதி இரவு 9.00 மணி சுமாருக்கு காஞ்சி கோவில் காவல் நிலைய வட்ட ஆய்வாளர் அவர்கள் வந்து சம்பவ இடத்தை பார்த்து மாதிரி வரைபடம் வரைந்து பார்வை மகஜர் தயார் செய்ததில் முதலாவதாக நானும், இரண்டாவதாக பிரகாசும் சாட்சி கையொப்பங்களை செய்தோம். **பார்வை மகஜர் அ.சா.ஆ. 2 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** காவல் ஆய்வாளர் அவர்கள் என்னை விசாரித்தார்கள்.

**எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை**

**1)** சாமியாத்தாள் மற்றும் விஜயலட்சுமி எனது ஊர்காரர்கள் என்றால் சரிதான். நான் கையெழுத்து செய்வதற்கு முன்னர் விஜயலட்சுமி சாமியாத்தாளுக்கு நடந்த விவரம் தெரிந்து கொண்டேன் என்றால் தெரிந்து கொண்டேன். நான் கையெழுத்து செய்த தாளில் கடைசி ஐந்து வரிகளுக்கு இடையில் இடைவெளி இல்லாமல் உள்ளது

என்றால் சரிதான். பார்வை மகசரை கைப்பட எழுதிய நபர் பெருந்துறை காவல் ஆய்வாளர் என்றால் சரிதான். நான் சொன்ன தேதியில், சொன்ன நேரத்தில் ,சொன்ன இடத்தில் கையெழுத்து செய்யவில்லை என்றாலும் காவல் நிலையத்தில் வைத்து வெற்றுத் தாளில் கையெழுத்து செய்தேன் என்று சொன்னால் சரியல்ல. சாமியத்தான் விஜயலட்சுமி எனது உறவினர்கள் என்ற காரணத்தினால் போலீசார் கேட்டுக்கொண்டதற்கு இணங்க பொய் சாட்சி அளிக்கிறேன் என்றால் சரியல்ல .

மேற்படி சமயத்தில் வாய்க்காலில் தண்ணீர் இருந்ததா என நான் கவனிக்கவில்லை. மேற்படி இடத்தில் கிளை வாய்க்கால் உள்ளதா என்றால் அது பற்றி எனக்கு தெரியாது .வாய்க்காலுக்கு ஒட்டினார் போல் வடபுறம் காலியிடம் உள்ளது .

**மறுவிசாரணை**

இல்லை.

Signature of the Witness

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்லச் சொல்ல, என்னால் தட்டச்சருக்குச் சொல்லப்பட்டு, அவரால் திறந்த நீதிமன்றத்தில் தட்டச்சு செய்யப்பட்டு, சாட்சிக்கு படித்துக் காண்பிக்கப்பட்டு, சாட்சியால் சரி என்று ஒப்புக் கொள்ளப்பட்டு என் முன்னால் சாட்சியின் கையெழுத்து / கைரேகை பெறப்பட்டது.

நீதித்துறை நடுவர்,
பெருந்துறை